# kanchipuram District

## இரண்டாம் திருப்புதல் பொதுத்தேர்வு - 2023

### பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

### பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

பகுதி - I

14 x 1 = 14

I. பலவுள் தெரிக:

1. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமை நலம்
   க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
   உ) பொதிகையில் தோன்றியது
   ங) வள்ளல்களைத் தந்தது
   அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி
   இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி
2. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.
   அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்
   ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
   இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
   ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.
3. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது
   அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது
   ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது
   இ) கால நிலை மாறுபடுகிறது ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது
4. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்க காலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை
   அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
   இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்
5. சுரதா நடத்திய கவிதை இதழ்
   அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்
6. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
   அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச்சாறு
   இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி
7. *பொருத்துக :*

| | | | |
|---|---|---|---|
| அ) மாச்சீர் | - | 1) | கருவிளம், கூவிளம் |
| ஆ) காய்ச்சீர் | - | 2) | நாள், மலர் |
| இ) விளச்சீர் | - | 3) | தேமாங்காய், புளிமாங்காய் |
| ஈ) ஓரசைச்சீர் | - | 4) | தேமா, புளிமா |

   அ) 1,2,4,3 ஆ) 4,3,1,2 இ) 2,3,1,4 ஈ) 3,4,2,1
8. "ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்" என்னும் பாடல் வரி இடம் பெற்ற நூல்
   அ) தேவாரம் ஆ) திருவாசகம் இ) திருமந்திரம் ஈ) நன்னூல்

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



9. "வளர்தலம்" என்னும் சொல்லின் இலக்கணக் குறிப்பு தருக.
அ) வினைத்தொகை ஆ) உருவகம் இ) பண்புத்தொகை ஈ) எண்ணும்மை

10. அதிரவரும் நோய் ______ இல்லை.
அ) மனத்தான் ஆவதற்கு ஆ) இனத்தான் ஆவதற்கு
இ) எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு ஈ) திண்ணியர் ஆவார்க்கு

11. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது
அ) கடந்தகாலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை
இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்

12. ச.த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய நூல்
அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும்
இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்

13. "தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்" என்னும் கருத்தை உணர்த்தும் கதை
அ) முதல் கல் ஆ) தலைக்குளம் இ) உரிமைத்தாகம் ஈ) கோடைமழை

14. Mini Meals - என்பதன் சரியான தமிழ்ச்சொல்
அ) உணவு ஆ) சிற்றுண்டி இ) விரைவுணவு ஈ) சிற்றுணவு

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக :** 3 x 2 = 6

15. வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்க வேண்டியவை எவை?
16. நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?
17. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?
18. ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக :** 2 x 2 = 4

19. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
20. தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் யாரால் எப்போது அமைக்கப்பட்டது?
21. "விரிபெரு தமிழர் மேன்மை
ஓங்கிடச் செய்வ தொன்றே
உயிர்ப்பணியாகக் கொண்டேன்" - யார், யாரைப் பற்றி, எதற்காகக் கூறுகிறார்?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக :** 7 x 2 = 14

22. பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க :
அலை, அளை, அழை
23. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக்குக.
(ஐ, ஆல், கு, இன், அது, கண்)
அ) காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.
ஆ) மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்.
24. தொடரில் உள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
அ) வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும், காகங்கள் கூவிக் கொண்டும் இருந்தன.
ஆ) ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



25. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

அ) தாமரை ஆ) தலைமை

26. ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க.

அ) பூத்த மலரொன்று பறக்கிறது

அ) வானம் அழுகிறது. பூமி சிரிக்கிறது.

27. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) உயர்ந்தோர் ஆ) விம்முகின்ற

28. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.

அ) பூம்பாவாய் ஆ) சொல்லிடத்து

29. செவியறிவுறூஉ துறையை விளக்குக.

30. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக :

அ) ஆற அமர ஆ) வழிவழியாக

## பகுதி - III

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக : 2x4=8

31. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

32. எங்கிருந்தோ வருகிறது
வண்ணத்துப்பூச்சியொன்று
பறவைகளும் வரக் கூடும் நாளை - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

34. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக : 2x4=8

35. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் நோக்கில் அழகியல் கூறுகளில் சொற்புலம் பற்றி எழுதுக.

36. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

37. அறிவின் நகரம் சென்னை என்பதற்கான சான்றுகள் நான்கு தருக.

38. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

## பகுதி - IV

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக : 3x4=12

39. அ) பொருள் வேற்றுமையணியைச் சான்றுடன் விளக்குக.

*(அல்லது)*

ஆ) அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகழ்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

40. அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

*(அல்லது)*

ஆ) பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.

41. ***இலக்கிய நயம் பாராட்டுக. மையக் கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.***

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே - திரிகூடராசப்பக் கவிராயர்

42. *பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.*

அ) சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்

*(அல்லது)*

ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

43. *தமிழாக்கம் தருக :*

அ) Learning is a treasure that will follow its owner everywhere.

ஆ) A new language is a new life.

இ) Knowledge of languages is the doorway to wisdom.

ஈ) The limits of my language are the limits of my world.

பகுதி - V

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 x 6 = 18

44. அ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

*(அல்லது)*

ஆ) புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரிய பொறியாளர்களுக்குக் கடிதம் எழுதுக.

45. அ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.

*(அல்லது)*

ஆ) எச்.ஏ.கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப் பற்று ஆகியவற்றை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியவை யாவை?

பகுதி - VI

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக : 4 + 2 = 6

அ) 'ஒருமையுடன்' என்று தொடங்கும் 'தெய்வமணிமாலை' செய்யுட்பகுதியை எழுதுக.

ஆ) 'அறிவு' என்று முடியும் குறட்பாவை எழுதுக.

******

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com